# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 310 / 2023

| Deposition of Witness for | Prosecution PW8<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Dr. Nivethitha Devi |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 3rd day of August, 2026.

( Accused is present )

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

**நேரம் 12.09 மணி**

நான் தற்போது National Centre of ageing clinic, சென்னை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் பழவேற்காடு அரசு மருத்துவமனையில் 23-04-2021 அன்று மாலை 4.30 மணிக்கு பணியில் இருந்தபோது சிவரஞ்சினி த/பெ. முனுசாமி

என்பவரை சாந்தி என்பவர் அழைத்து வந்தார். சிவரஞ்சினி சுயநினைவுடன் இருந்தார். மாலை சுமார் 3.00 மணியளவில் தெரியாத நபரால் வெளியில் மலம் கழிக்க சென்றபோது சிவரஞ்சினி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக கூறினார். முதலில் அந்த தெரியாத நபர் போன் நம்பர் கேட்டதாக கூறினார். அதை மறுத்ததனால் முகத்தில் அடித்து கழுத்தை நெரித்து பலமுறை அடித்து முட்புதரிக்கு இழுத்து சென்று பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறினார். சிவரஞ்சினியை பரிசோதனை செய்தததில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. கழுத்தில் நகக்கீறல்கள்–3 எண்ணிக்கைகள், இடது கண்ணில் இரத்தம் கன்றிய வீக்கம், இடது கன்னத்திலும் இரத்தம் கன்றிய வீக்கம், இடது கண்ணின் மேல்புறம் 1x1 cm கிழிந்தகாயம் காணப்பட்டது. இடது கன்னத்தில் கிழிந்த காயம் 1x1x1 cm காணப்பட்டது. அதற்கு தையல் போட்டேன். வலது கன்னத்தில் 1x1 cm கிழிந்தகாயம் காணப்பட்டது. மேல்உதட்டில் வீக்கம் காணப்பட்டது. சிராய்ப்பு காயங்கள், காலிலும், புட்டத்தில் காணப்பட்டது. மேல் சிகிச்சைக்காக Gynecologist கருத்துரைக்காக பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

23–04–2021 அசா1க்கு சிகிச்சை அளித்த பிறகு எத்தனை நாட்கள் கழித்து டிஎஸ்பி என்னை விசாரித்தார் என்றால் ஒருவாரத்திற்குள் என்னை விசாரித்திருப்பார். அசா1 பாலியல் வன்புணர்வு செய்ததாக நான் விசாரணை செய்யும்போது கூறிய நிலையில் பாதிக்கப்பட்ட பெண்ணில் பெண்உறுப்பை பரிசோதனை செய்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் அதற்கான Specialist இல்லை என்பதால் பரிசோதனை செய்யவில்லை. அசா1ன் என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது அவரின் உடலில் மாற்றங்கள் ஏதாவது காணப்பட்டது இரத்தம் காயம் காணப்பட்டது. உடலில் மண் இருந்தது. இந்த விவரத்தை டிஎஸ்பி விசாரித்தபோது கூறினேனா என்றால் இல்லை. அசா1 என்னிடம் சிகிச்சை வந்தபோது குளித்துவிட்டு வேறு உடை அணிந்து தான் வந்தார் என்றால் சரியல்ல.

மண்ணோடு தான் வந்தார். பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு ஏற்பட்டதாக நான் கூறும் காயங்கள் குழுவாக நபர்கள் வந்து அடித்தால் தான் வரும் என்றால் laceration, கிழிந்த காயம் 1x1x1 cm குழுவாக அடித்தால் வராது. 1x1x1 cm அது Superficial ஆக ஏற்பட்டிருந்த காயம். தனிநபர் அடித்தால் ஏற்பட்ட காயம் ஆகும். நான் அ.சா.1 ஐ பரிசோதனை செய்தபோது அவர் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டதாக அறிகுறிகள் காணப்பட்டது என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். டிஎஸ்பி என்னை ஒருவார காலம் கழித்து விசாரித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

SESSIONS CASE NO. 310 / 2023

| Deposition of Witness for | Prosecution PW9<br>Defence<br>Court |
|---|---|

Name : Dr. Raj Bharath

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 3rd day of August, 2026.

( Accused is present )

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

**நேரம் 12.31 மணி**

**(சாட்சி காணொளியில் ஆஜர்)**

நான் தற்போது சென்னை மருத்துவ ராஜிவ் காந்தி அரசு மருத்துவ கல்லூரியில் 2 ஆம் ஆண்டு குடலியியல் மேற்படிப்பு படித்து வருகிறேன். AR 1386/2021 நாள் 12-08-2021 அன்று நான் பணியில் இருந்தபோது ராஜேந்திரன் மகனான

20 வயதுடைய திரு. பன்னீர்செல்வம் முகவரி நெ. 9, ஆரணியம்மன் கோவில் தெரு, வைரவன் குப்பம், பழவேற்காடு, சென்னை என்பவர் பொன்னேரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தை சேர்ந்த காவலர் திருமதி. மனோரஞ்சனி PC 3091 அவர்களால் மாண்புமிகு நீதித்துறை நடுவர் எண் 2 பொன்னேரி அனுப்பிய மருத்துவ பரிசோதனை வேண்டுகோளின்படி மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துவரப்பட்டார். மேற்கண்ட நபரை 12-08-2021 காலை 9.20 மணியளவில் நான் மருத்துவ பரிசோதனை செய்தேன். பரிசோதனையின் அடிப்படையில் மேற்கண்ட நபர் ஆண்மையற்றவர் என்று கூறுவதற்கு எந்த வித முகாந்திரமும் இல்லை என்று கண்டறியப்பட்டது. எதிரிக்கு நான் வழங்கிய மருத்துவ சான்றிதழ் **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலீசார் விசாரித்து என்னிடம் வாக்குமூலம் வாங்கும்போது எதிரிக்கு ஆண்மை தன்மை பரிசோதனை செய்ததாக கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு ஆண்மை தன்மை இல்லை என்பதற்கான எந்த வித முகாந்திரமும் இல்லை என்று சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரியை பரிசோதனை செய்தபோது வெளிப்புற பிறப்புஉறுப்பு சுருங்கிய நிலையில் இருந்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சுருங்கிய நிலையல் இருந்த உறுப்பு எத்தனை செமீ இருந்தது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் எழுந்த நிலையில் எத்தனை செமீ இருந்தது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு விறைப்பு தன்மை உள்ளதாக என்பதற்காக நான் எடுத்த நடவடிக்கை பற்றி நான் சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் 2 ஆம் பாலினத்திற்கான பண்புகள் உள்ளது என குறிப்பிட்டுள்ளேன். ஆண்மை குறி சாதாரணமாக இருந்து என குறிப்பிட்டுள்ளேன். Bulbo Cavernous reflex present என குறிப்பிட்டுள்ளேன். Cremastric reflex present என குறிப்பிட்டுள்ளேன். விறைப்பு தன்மையுடன் எதிரியின் ஆண்குறி பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். எவ்வளவு செமீ இருந்தது என

குறிப்பிடவில்லை. எதிரியின் விந்துப்பை சரியான முறையில் அமைந்திருந்ததா என்றும் அதை நான் சோதனை செய்தேனா என்றால் Prostate gland பார்க்கவில்லை. External Genetalia ஐ பார்த்தேன். நான் எதிரியை சரிவர மருத்துவ பரிசோதனை செய்யாமல் பொதுவாக அளிப்பதுபோல் எதிரி ஆண்மை தன்மை அற்றவர் என்று எந்த வித முகாந்திரமும் இல்லை என்று தவறாக மருத்துவ அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் வேண்டுகோள் கடிதத்தில் எதிரியின் விந்தணுவை சோதிக்க கடிதம் கொடுத்தார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.